மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

# பேச்சுப் போட்டி 2022

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

## ஆண்டு 5

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம் !

### நாமும் எம் தமிழ் பண்பாடும்

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் சிறப்புமிக்க வரிகளில் உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் நம்முடைய சகோதர சகோதரிகளே! அது போன்று உலகில் உள்ள அனைத்து ஊர்களும் நமக்கு சொந்தமானதே என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருந்தார்.

இது தமிழர் எம் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவே நாம் எண்ணுகின்றோம். நாம் எங்கு சென்றாலும் எங்களை வரவேற்று உபசரிப்பதற்கு உறவுகள் உண்டு என்ற எண்ணம் எமக்கு மட்டுமே உண்டு.



உலகமே வியக்கும் எம் பண்பாடுகளில் விருந்தோம்பலும் வந்தவர்களை இன்முகத்தோடு வரவேற்கும் பண்பும் சாலச் சிறந்தவை. எம்மவர்களால் போற்றிப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த எம் பண்பாடு இன்றைய அதிவேக உலகில் நேரமின்மை எனும் சொல்லால் சிதைக்கப்படுவது வருத்தமளிக்கும் ஒன்று.

உறவுகள் இருந்தும் உறவுமுறை அறியாதவர்களாய், உறவினர்களை நண்பர்களை வரவேற்கத் தெரியாதவர்களாய், தொலைக்காட்சியும் கைத்தொலைபேசியும் வலைத்தள விளையாட்டுக்களும் எம்மை ஆட்கொண்ட தலைமுறையாய் நாம் உருவாக வேண்டாம். பண்பாடு மூலமே ஒரு மொழி வளர்க்கப்படுகின்றது எனவே எம் மொழியாம் தமிழ் மொழியை வளர்க்க பண்பாட்டை இழக்காதிருப்போம்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் பலோமியற் அன்ரனிஸ்ராலின்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.